2022 மே 6]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக்காலத்தில், 8 அங்கன்வாடி மையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, இன்னும் பணி துவங்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பணிகள் துவங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியில் 8 அங்கன்வாடி மையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறினார்கள். அது ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கைக்கு அரசு சிறப்பு கவனம் செலுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கூறி, சரி செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

கால்நடை மருத்துவமனை

***10138—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர் அண்ணன் கே.பி. அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தருமபுரி ஒன்றியம், அக்கமனஅள்ளி, சோளக்கொட்டாய் பகுதியில்தான் கால்நடை கிளை நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். அந்தப் பகுதியில் உள்ள பசுக்களின் எண்ணிக்கை 2,712; எருமைகளின் எண்ணிக்கை 707; செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 85; வெள்ளாடுகளின் எண்ணிக்கை 205; கோழி வகைகள் இவையெல்லாம் சேர்ந்து 3,709 கால்நடைகள் அங்கே இருக்கின்றன. அருகில் உள்ள கால்நடை கிளை நிலையங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், ஏறக்குறைய 5 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; அரசு நிர்ணயித்துள்ள தேவையான அலகுகள் இந்தப் பகுதியில் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பகுதியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க முன்வருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி பொதுவாக கால்நடை மருத்துவமனைகளை நேரடியாகத் துவக்க இயலாது. முதலில் கால்நடை கிளை நிலையம்தான்*

2022 மே 6]

துவக்க முடியும். அந்த கிளை நிலையத்திற்கு நாள்தோறும் 30 கால்நடைகள், மருத்துவ சேவை மற்றும் இதர சேவைகள் பெறுவதற்கு வரும்பட்சத்தில், அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும்.

கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு, அம்மருந்தகத்தில் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் சராசரி எண்ணிக்கை 40–க்குமேல் இருக்க வேண்டும். மேலும், அந்த கால்நடை மருந்தகம் 20 சென்ட் நிலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். உள் நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவு வசதிகள், மருந்துகள் வைப்பறை, அலுவலக அறை, சிகிச்சை அறை போன்றவற்றிற்குப் போதிய இட வசதிகள் இருத்தல் அவசியம். மேலும், அரசின் விதிமுறைகளின்படி கால்நடை கிளை நிலையம் துவங்க அந்தக் கிராமத்தில் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை கோரியுள்ள நடுப்பட்டி கிராமத்தில் 2,010 பசு இனங்களும், 54 எருமை இனங்களும், 21 செம்மறி ஆடுகளும், 82 வெள்ளாடுகளும், 110 கோழி இனங்களும் ஆக மொத்தம் 2,277 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. எனவே, தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில்கள், நான் சொன்னவை எல்லாம். . . (குறிக்கீடு) அரசு அதிகாரிகள் கொடுத்த விவரங்களைத்தான் நானும் சொல்லியிருக்கிறேன். அடுத்து, தென்கரைக்கோட்டை பகுதியில் உள்ள வடகரையில் ஒரு நாளைக்கு 3,000 லிட்டர் பால் கிடைக்கிறது. அங்கிருக்கிற பசுக்களின் எண்ணிக்கை 2,937, எருமைகளின் எண்ணிக்கை 300, ஆடுகளின் எண்ணிக்கை 120, இவ்வாறு அங்கு 3,357 கால்நடைகள் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *3,000 கால்நடைகள், 3,000 லிட்டர் பால் எப்படி போதும்?*

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU — TRUTH ALONE TRIUMPHS

[*2022 மே 6*

முற்பகல் 10–40

திரு. ஆ. கோவிந்தசாமி: *அந்தப் பகுதியில்* BMC Center, *பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. 3,000 மாடுகள் இருந்தால் குறைந்தது ஒரு நாளைக்கு 30,000 லிட்டர் பால் வரும். 300 மாடுகள் இருந்தாலே 3,000 லிட்டர் பால் வந்துவிடும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு கேட்கவில்லை. நான் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருமாறுதான் கோரினேன். நான் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம்தான் கேட்டிருந்தேன். ஆகவே, இந்த வடகரை பகுதியிலும் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான பரிந்துரை ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இதைத் தொடங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் எனத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது கால்நடை கிளை நிலையம் அல்ல, மருந்தகம். அந்தக் கேள்விக்குத்தான் முதலில் கால்நடை மருந்தகம் இல்லை என்ற பதிலை நான் சொன்னேன். அந்த வகையில் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியில் 20–வது கால்நடை கணக்கெடுப்பின்படி, 77,000 மாட்டினங்களும், 64,000 ஆட்டினங்களும், 9 இலட்சம் கோழியினங்களும் விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன. இவற்றுக்கு மருத்துவ மற்றும் இதர சேவைகள் வழங்குவதற்கு ஒரு கால்நடை மருத்துவமனையும், 22 கால்நடை மருந்தகங்களும், 3 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டி கிராமத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள மூக்கனேரியிலும், 6 கி.மீ. தொலைவில் உள்ள செட்டிக்கரையிலும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஊரை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதையும் குறிப்பெடுத்துக்கொண்டு, இத்துறை அதிகாரிகளின்மூலம் ஆய்வு செய்து, கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமென்று*

2022 மே 6]

சொன்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல் அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தியாகராஜன் அவர்கள்.*

திரு. ந. தியாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி சட்டமன்றத் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை யூனியன், கொம்பக்கரை பஞ்சாயத்தைச் சேர்ந்த பெருகனூரில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத்தர தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்கள் இருக்கும் கிராமங்களில் 3,000 கால்நடைகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அருகிலுள்ள கால்நடை கிளை நிலையத்திலிருந்து குறைந்தபட்சம் 3 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். தினசரி வருகைதரும் கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆவது இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தப் பகுதியில் எங்கள் துறையின்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, நிதிநிலைக்கேற்ப அரசு சிந்திக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பவானிசாகர் தொகுதி, அரியப்பமலை பேரூராட்சியில் உள்ள பெரியூர் என்னுமிடத்தில் கால்நடை மருத்துவமனை உள்ளது. ஆனால், அது செயல்படாமல் உள்ளது. ஆகவே, அந்தக் கால்நடை மருத்துவமனையை கால்நடைகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

[2022 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் கால்நடை மருத்துவர்கள் நியமனம் சம்பந்தமாக பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் நடந்துவந்தன. தற்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அந்த வழக்குகள் நடத்தப்பெற்று, 1,089 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் தற்போது மருத்துவர்களே இல்லை என்ற நிலைமை இல்லாத வகையில், கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்திருக்கின்றோம். கால்நடை உதவியாளர்களும் தேர்வு செய்யப்பட்டு வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலும் அதுபோன்ற நிலை இருக்குமேயானால், உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை எங்கள் துறையின்மூலம் எடுப்போம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

237—

புதைவடங்கள்

***3695—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, தோட்டப்பாளையம், மண்டி தெரு, காந்தி சாலை, மூங்கில் மண்டி வீதி மற்றும் அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் உள்ள உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS